கரிநாட்கள் சோதிடமா? வரலாறா?

(தமிழர்களின் தனித்துவமான வானியல் கணிப்பு)

'கரிநாள்' என்பது தமிழ்ப் பாரம்பரிய பஞ்சாங்கக் கணக்கீடுகளின்படி, சுப காரியங்களைத் தொடங்குவதைத் தவிர்க்கும் ஒரு நாளாகும். இந்த நாட்களில் தொடங்கும் காரியங்கள் தடையின்றி முடிவது கடினம் அல்லது சுப பலன்களைத் தராது எனக் கருதப்படுகிறது. இந்த நாட்களில் திருமணம், நிச்சயதார்த்தம், கிரகப்பிரவேசம், புதிய தொழில் தொடங்குதல், சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் வாங்குதல், நீண்ட தூரப் பயணங்கள் மற்றும் சுபநிகழ்ச்சிகள் பெருமளவில் தவிர்க்கப்படுகின்றன. இருப்பினும், இந்த நாட்கள் அன்றாடச் செயல்களுக்கோ, அலுவலகப் பணிகளுக்கோ அல்லது விவசாய வேலைகளுக்கோ எவ்விதத் தடையையும் ஏற்படுத்துவதில்லை; புதிய சுப முயற்சிகளுக்கு மட்டுமே இந்த நாட்கள் உகந்தனவாகக் கருதப்படுவதில்லை.



தமிழர்களின் தனித்துவம்

இந்தக் கரிநாள் வழக்கம் வட இந்தியாவிலோ அல்லது பிற மாநிலப் பஞ்சாங்க முறைகளிலோ கிடையாது; அங்கு ராகு காலம், அமாவாசை, அஷ்டமி, நவமி போன்றவையே சூன்ய நாட்களாகக் கருதப்படுகின்றன. கரிநாள் என்பது முற்றிலும் தமிழ் சோதிடக் கணிப்பிற்கே உரிய ஒரு தனித்துவமான அம்சமாகும். இதனால் தான்

தமிழ்நாடு, இலங்கை (யாழ்ப்பாணம், மலையகம்) மட்டுமன்றி மலேசியா, சிங்கப்பூர், கனடா, அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அனைவராலும் இது இன்றும் கடைப்பிடிக்கப்படுகிறது.

வானியல் அடிப்படை

கரிநாட்கள் சந்திரனின் சுழற்சியான திதி, நட்சத்திரம் அல்லது கிழமைகளை அடிப்படையாகக் கொண்டவை அல்ல; அவை முற்றிலும் **சூரியனின் சுழற்சி மற்றும் நகர்வை (Solar Movement)** மட்டுமே அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகின்றன. சூரியன் 12 ராசிகளில் உள்ள 27 நட்சத்திரங்களின் வழியாகப் பயணிக்கும்போது ஏற்படும் மிகத் துல்லியமான பாகை மற்றும் நட்சத்திரப் பாதங்களின் அடிப்படையில் இந்த நாட்கள் அமைந்துள்ளன.

பழங்காலச் சோதிட நூலான **'வருஷாதி நூல்'** கணிப்பில் கரிநாட்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன என்கின்றனர் சோதிடர்கள். இந்தக் குறிப்பிட்ட நாட்களில் சூரியனின் கதிர்வீச்சு, புவியீர்ப்பு விசை மற்றும் வளிமண்டல ஆற்றல்களில் எதிர்மறையான மற்றும் தீவிரமான மாற்றங்கள் (Negative/Intense Energy) ஏற்படுகின்றன என்கின்றனர். இதனால் வடமொழியில் இதனை **'மாத த்யாஜ்யம்'** (மாதத்தில் விலக்கப்பட வேண்டிய பகுதி) என்று அழைக்கின்றனர்.

கரிநாட்கள் இராசி மண்டலத்தில் சூரியன் ஒரு குறிப்பிட்ட நிலையான சில புள்ளிகளைக் கடந்து செல்லும் நாட்களாகும். இதனால், வாக்கிய மற்றும் திருக்கணித பஞ்சாங்கங்கள் என இரண்டிலுமே கரிநாட்கள் எவ்வித முரண்பாடும் இன்றி ஒரே தேதிகளிலேயே வருகின்றன. மேலும், இந்தத் தேதிகள் ஆண்டுதோறும் மாறுவதே இல்லை.

34 கரிநாட்கள்

ஒரு தமிழ் வருடத்தில் மொத்தம் **34 கரிநாட்கள்** உள்ளன (சில தினசரி நாட்காட்டிகளில் 35 எனப் பதிவிடப்பட்டிருக்கும்). தமிழில் சோதிடத்திற்கு முதன்மையான **'ஜோதிட கிரஹ சிந்தாமணி'** என்னும் வருஷாதி நூலில் உள்ள பழந் தமிழ்ப் பாடல் ஒன்றில் இந்த 34 நாட்களும் தெளிவாகப் பட்டியலிடப்பட்டுள்ளன. இதில் சித்திரை முதல் மாசி வரை வரும் 30 கரிநாட்களை **"உதவாத நாட்கள்"** என்றும், பங்குனி மாதத்தில் வரும் 4 கரிநாட்களை **"மிகுந்த தீமையான நாட்கள்"** என்றும் அந்தப் பாடல் குறிப்பிடுகிறது. குறிப்பாக, பொங்கல், மாட்டுப்பொங்கல் மற்றும் காணும்பொங்கல்

ஆகிய மூன்று பண்டிகை நாட்களுமே (உத்தராயண புண்ணியகாலத் தொடக்கம்) கரிநாட்களாகவே அமைகின்றன.

எவற்றைத் தவிர்க்க வேண்டும்?

கரி நாட்களில் பொதுவாகக் கீழ்வரும் சுப நிகழ்ச்சிகள் தவிர்க்கப்படுகின்றன:

- திருமணம் மற்றும் நிச்சயதார்த்தம்
- கிரகப்பிரவேசம் (புதுமனை புகுவிழா)
- புதிய தொழில் அல்லது வியாபாரம் தொடங்குதல்
- சொத்துக்கள், வாகனங்கள் வாங்குதல்
- நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்வது

தினசரிப் பணிகளுக்கு விலக்கா?

இல்லை. கரி நாள் என்பது முற்றிலும் நம்முடைய அன்றாடக் கடமைகளையோ, வழக்கமான அலுவலகப் பணிகளையோ அல்லது விவசாயப் பணிகளையோ முடக்குவதற்கான நாள் அல்ல. புதிய சுப முயற்சிகளுக்கு மட்டுமே இந்த நாள் உகந்ததாகக் கருதப்படுவதில்லை.

கரி நாட்கள் என்பது பிரதானமாக **தமிழ் பாரம்பரியம் மற்றும் தமிழ் பஞ்சாங்கத்தை (வாக்கிய பஞ்சாங்கம் / திருக்கணித பஞ்சாங்கம்)** பின்பற்றும் சமூகங்களில் மட்டுமே கடைப்பிடிக்கப்படுகிறது. எனவே, இது ஒரு குறிப்பிட்ட நாட்டோடு மட்டும் சுருங்கிவிடாமல், **தமிழர்கள் வாழும் மற்றும் தமிழ் பண்பாடு பரவியுள்ள உலக நாடுகள் அனைத்திலும்** கடைப்பிடிக்கப்படுகிறது.

முக்கியமாக கீழ்வரும் நாடுகளில் கரி நாட்கள் பரவலாகக் கவனிக்கப்படுகின்றன:

- **இந்தியா:** குறிப்பாக தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் வாழும் மக்கள் தங்களின் அன்றாட சுப முகூர்த்தங்களை முடிவு செய்யும்போது கரி நாட்களைத் தவிர்க்கிறார்கள்.
- **இலங்கை:** யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடகிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகப் பகுதிகளில் வாழும் ஈழத் தமிழர்கள் பாரம்பரிய வாக்கிய பஞ்சாங்கத்தின் அடிப்படையில் கரி நாட்களைக் கடைப்பிடிக்கின்றனர்.

- **மலேசியா & சிங்கப்பூர்:** இந்த நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழ் சமூகத்தினர், அங்குள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இந்து ஆலயங்கள் மற்றும் தமிழ் பஞ்சாங்கங்களின் வழிகாட்டுதலின்படி சுப காரியங்களுக்கு இந்நாட்களை ஒதுக்குகிறார்கள்.
- **புலம்பெயர் தமிழர்கள் வாழும் பிற நாடுகள்:** மொரிஷியஸ், ரீயூனியன் தீவுகள், தென்னாப்பிரிக்கா, கனடா, லண்டன் (UK), அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழர்களும் தங்களின் குடும்ப சுப நிகழ்ச்சிகளுக்கு (திருமணம், கிரகப்பிரவேசம் போன்றவை) கரி நாட்களைத் தவிர்த்து மற்ற நாட்களையே தேர்வு செய்கிறார்கள்.

ஒரு முக்கிய வேறுபாடு: வட இந்தியாவிலோ அல்லது பிற மாநிலங்களிலோ கடைப்பிடிக்கப்படும் பஞ்சாங்க முறைகளில் (உதாரணமாக விக்கிரம் சகாப்தம் அல்லது பிற பிராந்திய காலண்டர்கள்) 'கரி நாள்' என்ற தத்துவம் கிடையாது. அவர்கள் அமாவாசை, ராகு காலம், பத்ரா திதி அல்லது அஷ்டமி-நவமிகளை மட்டுமே பொதுவான சூன்ய நாட்களாகக் கருதுகிறார்கள். 'கரி நாள்' என்பது **தமிழ் சோதிடக் கணிப்பிற்கே உரிய ஒரு தனித்துவமான அம்சம்** ஆகும்.

பூமி சூரியனைச் சுற்றிவர ஒரு வருடம் ஆகிறது. நாம் பூமியிலிருந்து பார்க்கும் போது சூரியன் வானில் 12 இராசிகளில் உள்ள 27 நட்சத்திரங்களின் வழியாக நகர்ந்து ஒரு வருடத்தில் ஒரு சுற்றுச் சுற்றி வருவது போன்று நமக்குத் தெரியும். வானியல் கணக்கீட்டின்படி, சூரியன் 1 நாளைக்குத் தோராயமாக 1° (1 பாகை) நகர்ந்து 365.25 நாட்களில் 360° (360 பாகை) ஒரு வட்டம் சுற்றி வருகிறது. மொத்தம் 27 நட்சத்திரங்கள், ஒவ்வொரு நட்சத்திரமும் 4 பாகங்கள், எனவே மொத்தம் 27 x 4 = 108 பாகங்கள். மொத்தம் 12 மாதங்கள் (அல்லது 12 இராசிகள்) உள்ளன. எனவே ஒவ்வொரு இராசியும் 108 / 12 = 9 நட்சத்திரப் பாதங்களைக் கொண்டது. இந்த அடிப்படை விதியின் கீழ் **ஜோதிட கிரஹ சிந்தாமணியில்** குறிப்பிடப்பட்டுள்ள 34 கரிநாட்களுக்கான துல்லியமான அட்டவணை இது.

கரிநாட்கள் என்றால் என்ன?

ஜோதிட கிரஹ சிந்தாமணி	**கரிநாட்கள்**	**சூரியன் இருக்கும் நட்சத்திர பாதம்**
“இன்பமுறுமேடமதிலாறு பதினைந்தாம்	சித்திரை 6, சித்திரை 15	அஸ்வினி–2 பரணி-1
ஏறதனிலேழுபதி னாறுபதினேழாம்	வைகாசி 7, வைகாசி16, வைகாசி 17	கார்த்திகை–4 ரோகிணி–2 ரோகிணி - 2
அன்புமிகுமானியொன்று மாறலவ	ஆனி 1, ஆனி6,	மிருகசீரிஷம் – 3 மிருகசீரிஷம் - 4
னிரண்டோ டையிரண்டு மைந்நான்கு	ஆடி 2, ஆடி 10, ஆடி20,	புனர்பூசம்-4 பூசம்-2 ஆயில்யம் - 1
மாவணியிரண்டும் *ஒன்ப தேழு நான்கு*	ஆவணி 2, ஆவணி 9, ஆவணி 28,	மகம்-1 மகம்-3 உத்திரம் - 1
கன்னி யுற்றபதினாறே *டொன்றொருமுப்பான்று*	புரட்டாசி 16, புரட்டாசி 29	அஸ்தம் – 2 சித்திரை - 2
லையிலோராறு	ஐப்பசி 6, ஐப்பசி 20	சித்திரை – 4 விசாகம் -1
தேளில் முன் சோமவார மொன்று பத்து பதினேழாம்	கார்த்திகை முதல் திங்கள்கிழமை[1], கார்த்திகை 1, கார்த்திகை10, கார்த்திகை 17	..... விசாகம் -4 அனுஷம் -3 கேட்டை -1
*முனியாறுமின்பதும்பன்னொன்று**முதவா நாள்.***	மார்கழி 6, மார்கழி 9, மார்கழி 11	மூலம் – 2 மூலம் – 3 மூலம் - 4
உதவாத நாள் *கலையிலொன்றிரண்டுமூன்று* *வொருபதுடனின்றுபதி னேழதுவுமாகா*	தை 1, தை2, தை 3 தை 11 தை 17	உத்ராடம் -2 உத்ராடம்- 2 உத்ராடம்-2 திருவோணம் -1 திருவோணம்-3
துதிபெருகுமாசிபதினைந்துபதினாறும் *சொல்லுபதினேழு*	மாசி 15, மாசி16 மாசி 17,	சதயம்-3 சதயம்-3 சதயம் -4


[1] **குறிப்பு** – சில நாட்காட்டிகளில் கார்த்திகை 4ஆம் நாள் கரிநாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பாடலில் கார்த்திகை 4 குறிப்பிடப்படவில்லை. மாறாக, கார்த்திகை முதல்திங்கள் கிழமை என்று மட்டுமே உள்ளது.

*கடைமாதமதிலாறும் பதினைந்துமொன்றொழியைந் நான்கு**மிகுதீதாம்*** *பகர்ந்தமாதந்தோறுந் தெய்தியெனக கொண்டு கதிதருநற்தியை**வரை முனிவனுரைத்திட்ட***	பங்குனி 6 பங்குனி 15, பங்குனி 19	உத்திரட்டாதி – 1 உத்திரட்டாதி – 4 ரேவதி -1
கரிநாண்முப்பானான்குங் கண்டறிகுவீரே”	***கரிநாட்கள் 34 +1***	

என 35 நாட்களைக் கரிநாட்கள் என்று மேலேயுள்ள கவியில் தெளிவாகச் சொல்லியுள்ளனர்.

வரலாற்றுப் பின்னணி

கரிநாட்கள் என்ன காரணத்திற்காகப் பின்பற்றப்படுகின்றன? இந்த நாட்களில் சுபநிகழ்ச்சிகளை ஏன் தவிர்க்க வேண்டும்? என்பதற்கான விளக்கங்கள் அடங்கிய சோதிட நூல்கள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. ஆனால் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயமும், குறிப்பாகப் பொங்கல் திருநாளன்றும் (தை-1) சுபநிகழ்ச்சிகளைத் தவிர்க்கின்றனர்.



இதற்கான காரணம் என்னவென்றால், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இந்த நாட்களில் தமிழர்களுக்கு மாபெரும் குமரிக்கோடு அழிந்த கடல்கோள் போன்ற

அழிவுகளோ ஏற்பட்டிருக்கலாம், அல்லது எரி நட்சத்திரம் விழுந்து பேரழிவு ஏற்பட்ட நாட்களாகவோ இருக்கலாம் என்று இந்தக் கட்டுரை ஆசிரியர் கருதுகின்றார்.

உதாரணம் 1) நெருப்பால் பேரழிவு - 2004-ஆம் ஆண்டு ஜூலை 16 அன்று கும்பகோணம் பள்ளித் தீவிபத்தில் 94 குழந்தைகள் உயிரிழந்தனர். அந்தத் தேதியை அந்த ஊர் மக்கள் துக்க தினமாகக் கருதி ஒவ்வொரு வருடமும் அந்தநாளில் சுபநிகழ்ச்சிகளைத் தவிர்க்கின்றனர்.

உதாரணம் 2) நீரால் பேரழிவு - 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 அன்று கடல்கோள் (சுனாமி) உண்டாகிப் பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்துபட்டனர். ஒவ்வொரு வருடமும் இந்த நாளில் கடற்கரையோர மக்கள் சுபநிகழ்ச்சிகளைத் தவிர்க்கின்றனர்.

எல்லோருக்கும் பெருந் துயரம் நடைபெற்ற துக்க நாட்களை மனித உளவியல் அடிப்படையில் ஒவ்வொரு வருடமும் எல்லோரும் தவிர்ப்பதே இதற்குக் காரணமாக இருக்கலாம்.

நகரத்தார் மரபும் வரலாற்றுச் சான்றும்

வரலாற்றுப் பேரிடர் நிகழ்ந்த நாட்களே கரிநாட்களாக இருக்கலாம் என்ற வாதத்திற்கு வலுசேர்க்கும் விதமாக நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரிடம் பழக்கம் ஒன்று அமைந்துள்ளது.



விளக்குச் சட்டி எடுத்தல்

காரணகாரியங்களை அறிந்தோ அறியாமலோ நாட்டுக்கோட்டை நகரத்தார் தொன்றுதொட்டுச் சில வழிபாடுகளை மரபு மாறாமல் செய்து வருகின்றனர். அவற்றில் இங்கே சிறப்பாகக் கருதவேண்டிய ஒன்றும் உள்ளது. ஆண்டுதோறும் தை முதல் நாள் பொங்கல் அன்று, நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் ***"விளக்குச் சட்டி - விளக்கு எடுத்தல்"*** என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சியை நடத்துகின்றனர். *"இதில் **முதுமக்கள்தாழி போன்று** அடிப்பாகம் கூம்பு வடிவத்தில் உள்ள ஒரு சட்டிக்குள் அவர்களது முன்னோர்களுக்குப் படையல் வைத்து விளக்கையும் ஏற்றி வைத்து வழிபடுகின்றனர். பொங்கல் நாளன்று எல்லா நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் இவ்வாறு அவரவர் முன்னோர்களுக்குச் சட்டிக்குள் படையல்இட்டு விளக்கு ஏற்றி வழிபடுகின்ற காரணத்தினால், அன்றைய தினமே நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் முன்னோர்கள் பெரிதும் இறந்துபட்டுள்ளனர் என்பது உறுதியாகிறது"* என்று காரைக்குடி இராமசாமி தமிழ்க்கல்லூரியின் மேனாள் முதல்வர் **முனைவர் நா.வள்ளி** அவர்கள் கருதுகிறார்*.* அதாவது அவர்கள் பூம்புகாரில் வாழ்ந்த காலத்தில் தை முதல்நாள் பொங்கல் நாளில் கடல்கோள் (சுனாமி) ஏற்பட்டு அழிந்துள்ளது எனக் கருத வேண்டியுள்ளது.

எனவே, கரிநாள் என்பது வெறும் சோதிடப் பயம் என்பதைத் தாண்டி, பல நூறு வருடங்களாகத் தமிழர்களின் வானியல் அறிவையும், அவர்கள் கடந்துவந்த துயரமான வரலாற்றுப் பேரிடர்களையும் தன்னுள் பொதித்து வைத்துள்ள ஒரு பண்பாட்டு எச்சம் எனலாம். காலங்கள் உருண்டோடிவிட்டன. காரணங்கள் தெரியாமலேயே போய்விட்டன. ஆனாலும் தமிழர்கள் தங்களது மரபு மாறாமல் கரிநாட்களில் சுபகாரியங்களைத் தவிர்த்து வருகின்றனர் என்பதே சரியான கருத்தாக இருக்க முடியும். நாமும் நமது முன்னோர்கள் பின்பற்றி வந்துள்ள வழிமுறைகளை மரபு மாறாமல் பின்பற்றுவோம்.

அன்பன்
காசிஸ்ரீ முனைவர் நா.ரா.கி. காளைராசன்,
மேனாள் துணைப் பதிவாளார், அழகப்பா பல்கலைக்கழகம்,
WhatsApp: + 91 9443501912
phone : 824826 6418
e-mail : kalairajan26@gmail.com